உ

கடவுள் துணை.

சாஸ்திரக் கோடியோனகிய

சகாதேவர்

திருவாய் மலர்ந்தருளிய

# பார்சிகைசாஸ்திரம்

## மூலமும்-உரையும்.

## தேவதாசக்கரத் தொடுகுறியும்.

இஃது

எட்டுப்பிரிதியிலிருந்ததை

சிலசோதிடர்கள்

அச்சிடக்கேட்டுக்கொண்டமையால்

சித்திரக்கவி-செஞ்சி

**ஏகாம்பரமுதலியாரவர்களால்**

எழுதப்பட்டு,

பூவிருந்தவல்லி சுந்தரமுதலியார் குமாரர்

**பூ. சு. குப்புசாமிமுதலியாரது**

ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை புரசை:

1904.

RangaRakes

tamilnavarasam.com

உ

கடவுள்துணை.

சாஸ்திரக்கொடியோனாகிய
சகாதேவர்
திருவாய்மலர்ந்தருளிய

# பாச்சிகைசாஸ்திரம்.

## மூலமும் - உரையும்.

### விநாயகர்காப்பு.

வெண்பா.

சீரோங்கு மிப்புவியோர் செயாப செயங்காணத்
தாரோங்கும் பாச்சிகைச் சாஸ்திரத்தின்—பேரோங்கச்
செந்தமிழால் மூலமுரைச் செப்புதற்கு முன்னுதவுந்
தந்திமுகத் தைங்கரந்தாட் காப்பு.

### முகவுரை - விருத்தம்.

அச்சுதன் தன்னருள்பெற்ற ஐவர்தன்னில்
ஆனந்தசகாதேவ ரன்புகூர்ந்து
பச்சமுடன்புவியோர்க்கு வேணுமென்று
பாச்சிகைசாஸ்திரத்தைப் பரிந்துகூற
நிச்சயமாய்நன்மைதுன்மை நேராய்காண
நீநிலத்திலுள்ளோர்கள் நிதங்களிக்க
இச்சையுடன்செஞ்சிநகர் வாழ்வேளாளன்
ஏகாம்பர மிந்நூலை வெளியிட்டேனே.

RangaRakes tamilnavarasam.com

# பாச்சிகைசாஸ்திரத்தின்
## விபரம்.

---

மகாமகுத்துவம் பொருந்திய சாஸ்திரக் கொடியோனாகிய சகாதேவர் திருவாய்மலர்ந்தருளிய பாச்சிகைச்சாஸ்திரம் பார்க்கும்வித மெவ்வித மெனில்? சந்தனக்கட்டையைப் பாச்சிகைப்போல் ஒன்றுசெய்து அதில்நாலுபக்கமும் ௧-௨-௩-௪. இந்தலக்கத்தை அதிற்பதித்து நினைத்தக் காரியத்தை மனதிலுத்தேசித்துக்கொண்டு வலதுகையில் கட்டையையெடுத்து மூன்றுதரம் குலிக்கி கீழேயுருட்டவும் மேற்பக்கம் லக்கத்தைக் கியாபகமாக எழுதிக்கொண்டு இப்படிக்குமூன்று தரம்போடவும் மேல் லக்கத்தை யெடுக்கவும் மூன்றுலக்கத்தையும் நினைவுவிடாமல் பாட்டைப்பார்த்தால் லெக்கப்படியிருக்கும் பாட்டைப்பார்த்தால் நன்மைதுன்மை ஆகும் அல்லவென்பது தெளிவாகச்சொல்லும் இவ்விதம் அறியவேண்டியது போடுகிறலெக்கம் மூன்றும் பிசகாமல் யெடுத்துப்பார்க்கவும் நாலுதரம் போடக்கூடாது.

---

## நான்முக-விருத்தம்.

௧-௧-௧-வரின்-பலன்.

சீருடன்லெக்கம்போடச் சேர்ந்ததுவொன்றேவந்தாற்
கோரிடத்தெய்வத்தாலுங் குறித்தவைவந்துசேரும்
மீரிடப்போனோர்மீள்வர் மிக்கவேநன்மையாகும்
நேரிடப்பகையும்வெல்லும் நிட்சயமிதுதப்பாதே.

(இ-ள்.) மேற்கண்டபடி பாச்சிகையை மூன்று தரம் உருட்டும்போது மூன்றுதரமும் ஒன்றுவொன்றாக வரின் அதின் பலன்யாதெனில் ஒருதெய்வகுற்றமுண்டு அந்ததெய்வத்தைக் கோறிவரில் நினைத்தப்பொருள் வந்துசேரும் வெளியூர் போனவர்வந்து சேருவர் நன்மையானதுப்பெருகும் நேராகநேர்ந்தால் பகையுந் தீரும் இக்குறிதப்பாது-எ-று. (௧)

RangaRakes tamilnavarasam.com

## க-க-உ-வரின் பலன்.

தப்பாமலொன்றேடொன்று தான்வறில்ரெண்டுமாக
மெப்புருஞ்செல்வமுண்டா மீறிடும்நாளும்வெற்றி
செப்பமாய்நினைத்தவேலை சீக்கிரம்வந்துகூடுங்
கொப்பெனவழக்குதானுங் கொற்றவராலேவெல்லும்.

(இ-ள்) பாச்சிகையை யுருட்டும்போது முதல் க-ம்-இரண்டாவது க-ம் மூன்ருவது உ-ம் காணில் அதின்பலன் யாதெனில் செல்வமானதுபெருகும் வெற்றியுண்டாகும் நினைத்த வேலைச் சீக்கிரத்தில்முடியும் வேந்தர்களால் வழக்கானதுவெல்லும்-எ-று. (உ)

## க-க-ய-வரின் பலன்.

வெல்லவேவொன்றும்வொன்றும் விளங்கிடபத்துமாகில்
புல்லவேநினைத்தவேலை பொல்லாங்காங்கைகூடாது
அல்லவேயொருவனலே யாகுமேபெரும்பயங்கள்
சொல்லருந்தீமையோடு சூழும்வஞ்சகமும்பாரே.

(இ-ள்) பாச்சிகையானது வுருட்டும்போது முதல் ஒன்று இரண்டாவது ஒன்றும் மூன்ருவதுப் பத்துமாக விளங்கில் அதின்பலன் யாதெனில் இப்போது வுத்தேசித்தகாரியத்தினல் பொல்லாங்குண்டாகும் ஒரு மனிதனல் பெரும்பயமானதுநேரும் தீமையானது சம்பவிக்கும் வஞ்சனையாகும் மத்திபம்-எ-று. (ங)

## க-க-௱-வரின் பலன்.

பார்க்கவேவொன்றுவொன்று பலித்திடநூறுமாகில்
தீர்க்கமாய்நினைத்தவேலை தீவிரம்நன்மையாகும்
பூர்க்கவேசெல்வமுண்டாம் புகழுண்டாம்வழக்குவெல்லும்
யேர்க்கவேபகையுமில்லை யிஷ்டமுமுறவுமாமே.

(இ-ள்) பாச்சிகை யானது வுருட்டும் போது முதல் ஒன்றும் இரண்டாவது க-ம் மூன்ருவது நூறுமாக விளங்கில் அதின் பலன் யாதெனில் மனதில் உரிதியாக நினைத்தவேலை தீவிரத்தில் நன்மையாகும் செல்வமானதுபெருகும் புகழுண்

RangaRakes
tamilnavarasam.com

டாகும் வழக்குவெல்லும் பகையானதுந்தீர்ந்து வுரவானது கூடும் உத்தமம்-எ-று. (௪)

## ௧-௨-௧-வரின் பலன்.

ஆமெனவொன்றிரெண்டு வொன்றுவந்துதிக்குமாகில்
நாமெனநன்மையாகும் நாடியப்பிணியுந்தீரும்
தாமெனப்பெண்ணினோடுத் தனமதுவந்துசேரும்
நேமெனவுரவுகூடும் நினைத்தவைபலிக்குநன்றே.

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதலொன்றும் இரண்டாவது ௨-ம் மூன்றாவது ௧-ம் விளங்கில் அதின்பலன்யாதெனில் நன்மையானது வுண்டாகும் வியாதியானது தீரும் பெண்ணோடுப் பொருள்வந்து சேரும் உறவானதுக் கூடும் நினைத்தகாரியம் பலிக்கும் உத்தமம்-எ-று. (௫)

## ௧-௨-௨-வரின் பலன்.

நன்றெனவொன்றிரெண்டு ரெண்டுவந்துதிக்குமாகில்
சென்றவைவந்துசேரும் செல்வமும்பெருகிநீடும்
நின்றிடநினைத்ததெல்லாம் நிலைக்கவேசித்தியாகும்
வென்றிடும்பயமுமில்லை விளங்கிடும்பதியுமுண்டாம்.

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதல் ஒன்றும் இரண்டாவது ௨-ம் மூன்றாவது ௨-மாகத்தோன்றில் அதின் பலன் யாதெனில் கைவிட்டுப் போனபொருள் வந்துசேரும் செல்வப்பெருக்குண்டாகும் நினைத்தகாரியம் யாவும் நிலைமையாக சித்தியாகும் வெற்றியுண்டாம் பயமொழியும் பதியுண்டாகும் உத்தமம்-எ-று. (௬)

## ௧-௨-௩-வரின் பலன்.

உண்டெனவொன்றிரெண்டு பத்துவந்துதிக்குமாகில்
விண்டிடநினைத்தவேலை வீணதாம்பலனுமில்லை
கண்டிடச்சூதினோடுக் கடும்பகைமாற்றுமுண்டு
தெண்டமுந்தீதுமுண்டாம் தேடியப்பொருளும்போமே.

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல் ௧-ம்-இரண்டாவது ௨-ம் மூன்றாவது ௩-மாக விளங்கில் அதின் பலன் யாதெ

RangaRakes tamilnavarasam.com

னில் நினைத்தக்காரியம் முடியாது வீணாகும் சூது நடக்கும் பகையுண்டாகும் மாற்றானுண்டு தெண்டம் நேரும் தீதுவுண்டாகும் தேடியப்பொருள் சேதமாகும் மத்திபம்-எ-று. (௭)

### ௧-௨-௩-வரின் பலன்.

போமெனவொன்றிரெண்டு மூன்றுவந்துதிக்குமாகில்
நாமெனப்பொல்லாப்பாகும் நாசமாம்நினைத்தவேலை
தாமெனத்தூரப்போனோர் தான்மீளார்துயரமுண்டாம்
ஆமெனஅழிவினோடு அடுத்தோருரவும்போமே.

(இ-ள்) பாச்சிகை யுருட்டும்போது முதல் ௧-ம் இரண்டாவது ௨-ம் மூன்றாவது ௩-மாகத்தோன்றில் அதின் பலன் யாதெனில் பொல்லாப் புண்டாகும் நினைத்தவேலை நாசமாகும் தூரதேசம்போனவர் மீண்டுவரமாட்டார் துயரமுண்டாகும் அழிவுநேரும் அடுத்திருந்த வுரவோர்கள் பிரிந்துப் போவர் மத்திபம். எ-று. (௮)

### ௧-௪-௪-வரின் பலன்.

பொருந்தியவொன்றுபத்து பத்துவந்துதிக்குமாகில்
கருதியக்கருமம்நன்றாம் கனமுடன்செயமுமாகும்
நிறைந்திடுஞ்சனிவிலகும் நீடியச்சிறையும்நீங்கும்
வருந்தியேபகைவரெல்லாம் வந்துரவாடுவாரே.

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல் ௧-ம் இரண்டாவது-௪-ம் மூன்றாவது ௪-மாகத்தோன்றில் அதின் பலன் யாதெனில் நினைத்தகாரியம் நன்மையாகும் செயமுண்டாகும் பிடித்தசனியானவன் விலகுவன் சிறைநீங்கும் பகைவராகயிருந்தோர் உரவாவார்கள் உத்தமம்-எ-று. (௯)

### ௧-௪-௧-வரின் பலன்.

வாரெனவொன்றுபத்து வொன்றுவந்துதிக்குமாகில்
சீரெனநினைத்ததெல்லாஞ் செல்வமாய்வந்துகூடும்
பேரெனப்படையும்வெல்லும் பெருங்காரியங்களாகும்
கூறெனப்பிணியுந்தீரும் குறித்தவைபலிதமாகும்.

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல் ௧-ம் இரண்டாவது ௪-ம் மூன்றாவது ௧-மாகவரில் அதின்பலன் யாதெனில்

RangaRakes tamilnavarasam.com

நினைத்தக்காரியம் தடையின்றிச் செல்வத்தோடுவந்து கை கூடும் படைவெல்லும் உத்தேசம்போல் முடியும் தேகத்தினி டமாகவந்த பிணிதீரும் இப்போது குறித்துப்போகின்ற காரி யம் கூடியசீக்கிரத்தில் பலிதமாகும் உத்தமம்-எ-று. (௰)

## க-௰-௱-வரின் பலன்.

ஆகவேயொன்றுபத்து நூறுவந்துதிக்குமாகில்
தாகமாய்வருகுந்தீதுத் தாய்தந்தைப் பிணியுமாவார்
சோகமாம்பந்துகட்குச் சலிப்பதுத்தானுண்டாகும்
பாகமாம்வருமையோடும் பலவிதவழக்குநேரும்.

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதல் க-ம் இரண்டாவது ௰-ம் மூன்றாவது ௱-மாகவரில் அதின்பலன் யாதெனில் சிந்தைவருத்தமடையும்படியான தீதுண்டாகும் தாய் தந்தையற்கு பிணியுண்டாகும் பந்துக்கள் யாவருக்கும் சலிப்புண்டாகும் வருமைப்படச்செய்யும் பலவிதமான வழக்கு நேரும் மத்திபம். எ-று. (௰க)

## க-௰-உ-வரின் பலன்.

நேரெனவொன்றுபத்து ரெண்டுவந்துதிக்குமாகில்
சீரெனயினத்தினோடே சங்கையுஞ்செம்பொனுண்டாம்
பேரெனயாத்திரைசென்றோர் பொருளுடன் வந்துசேர்வார்
கூரெனவெற்றியுண்டாங் குறித்தவைபலிக்குமன்றே.

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதல் க-ம் இரண்டாவது ௰-ம் மூன்றாவது உ-மாகத்தோன்றில் அதின் பலன் யாதெனில் இனத்திற் சங்கையுண்டாம் செம்பொன் உண்டாம் தூலதூரம் போனவர்கள் பொருளுடன் அதிக சீக்கிரத்தில் வந்துசேருவார் வெற்றியுண்டாகும் நினைத்தக்காரியம் பலிக்கும் உத்தமம்-எ-று. (௰உ)

## க-௱-க-வரின் பலன்.

மன்றெனவொன்றுநூறு மொன்றுவந்துதிக்குமாகில்
நன்றெனநன்மைசேரும் நாடியதெலாம்பலிக்கும்
குன்றெனக்குலத்திற்றானுங் குறித்தவைகையிற்கூடும்
சென்றெனத்துலவேபோனோர் சுகமுடன்வந்துசேர்வர்.

RangaRakes tamilnavarasam.com

(இ-ள்) பாச்சிகை யானது வுருட்டும்போது முதல் க-ம் இரண்டாவது ா-ம் மூன்ருவது க-மாகத்தோன்றில் அதின் பலன்யாதெனில் நன்மையானது பெருகும் நாடியக்காரியம் பலிதமாகும் குலத்தில் நினைத்தவைக் கைகூடும் தூரம் போனவர்கள் சுகமாகத்தானே வந்து சேருவார்கள் உத்தமம்-எ-று. (௰௩)

## க-ா-உ-வரின் பலன்.

சேரவேவொன்றுநூறு மிரண்டுவந்துதிக்குமாகில்
மீரவேகருமம்யாவு மிக்கவேநன்மையாகுங்
கோரவேதெய்வத்தாலே குடும்பமுஞ்செழிப்பதாகுந்
தூரவேவருமைதீர்ந்து துன்பமாம்பிணியும்நீங்கும்.

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதல்-க-ம்- இரண்டாவது ா-ம் மூன்ருவது உ-மாகத்தோன்றில் அதின் பலன் யாதெனில் நினைத்தக்கருமங்கள் யாவும் நன்மையாகும் தெய்வச்சகாயத்தினுல் குடும்பமானதுந் தழைத்தோங்கும் வருமையானது தீரும் துன்பமாகிய நோயுந்தீரும் உத்தமம்-எ-று. (௰௪)

## க-ா-௰-வரின் பலன்.

நீங்கவேயொன்றுநூறும் பத்துவந்துதிக்குமாகில்
பாங்கெனநன்மையோடு பலவிதச்செல்வமுண்டா
மோங்கியவேந்தராலும் ஒருவிதவழக்குமில்லை
தாங்கக்கைப்பொருளுஞ்சேருந் தழைக்கவேமதிக்கவாழ்வர்.

(இ-ள்) பாச்சிகை யுருட்டும்போது முதல்-க-ம் இரண்டாவது ா-ம் மூன்ருவது ௰-மாகத் தோன்றில் அதின்பலன் யாதெனில் நினைத்தவை நன்மையாகும் பலவிதமானச்செல்வமுண்டாகும் அரசர்களால் ஒருவிதவழக்கு மணுகாது கைப்பொருள்சேரும் கண்டவர்கள் களிக்கும்படியாகத் தழைக்க மதிக்கவாழ்வர் உத்தமம்-எ-று. (௰௫)

## க-ா-ா-வரின் பலன்.

வாழ்கவேவொன்றும்நூறும் நூறுவந்துதிக்குமாகிற்
சூழ்கவேநினைத்ததெல்லாஞ் சங்கரனருளால்கூடு
மீழ்கவேபிணியுந்தீரு மிக்கதோர்சுகமுமுண்டாம்
ஆழ்கவேயாகும்நன்மை அன்புடனுரவுகூடும்.

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதல் க-ம் இரண்டாவது ா-ம் மூன்ருவது ா-மாகத்தோன்றில் அதின்பலன் யாதெனில் நினைத்தக்காரியங்கள் யாவும் சிவபெருமானருளால்

RangaRakes tamilnavarasam.com

மைகூடும் பிணியானது தீரும் மேலாகிய சுகமுண்டாகும் நன்மைதருகும் உரவானது கூடும் உத்தமம். எ-று. (௰௬)

## ௨-௨-௨-வரின் பலன்.

கூடியரெண்டும்ரெண்டும் ரெண்டுவந்துதிக்குமாகில்
நாடியேநினைத்ததெல்லாம் நயம்பெறநன்மையாகும்
தேடியேயுரவுசேரும் தெய்வத்தினருளுமுண்டாம்
நீடியப்பிணியுந்தீரும் நிதியதுப்பெருகுஞ்சொல்லே.

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதற்கொண்டு மூன்று விசையும் இரண்டு யிரண்டாகத்தோன்றில் அதின்பலன்யாதெனில் நாடிநினைத்தவைகள் நன்மையாகும் உறவானது கூடும் தெய்வசகாயமுண்டாகும் தேகத்தினிடமாகவந்தப்பிணியானதுத் தீரும் பொருளானது கிடைக்கும் உத்தமம்-எ-று.

## ௨-௨-௧-வரின் பலன்.

சொல்லவேரெண்டும்ரெண்டு மொன்றுவந்துதிக்குமாகில்
வல்லவனொருவனாலே வரும்பொருள்வந்துகூடும்
புல்லவேநினைத்ததெல்லாம் புகழுடன்சித்தியாகும்
தொல்லையாம்வினையும்போகுந் துலங்கிடும் நன்மைதானே.

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதல் ௨-ம் இரண்டாவது ௨-ம் மூன்றுவது ௧-மாகத்தோன்றில் அதின் பலன்யாதெனில் வல்லமையுடைய வொருசினேகிதனால் பொருள் வந்துகூடும் நினைத்தவையாவும் சித்தியாகும் தொல்லை யானது அகலும் வினைநீங்கும் நாளுக்குநாள் நன்மையுண்டாகும் உத்தமம்-எ-று. (௰௮)

## ௨-௨-௩-வரின் பலன்.

நன்மையாம்ரெண்டும்ரெண்டும் நூறுவந்துதிக்குமாகில்
வன்மையாய்க்கலியாணந்தானும் வாகுடன்வந்துகூடும்
தன்மையாங்கூட்டமுண்டாந் தான்குடிபுகுதல்நன்றாம்
பன்மையாமரசராலே பாக்கியம்வருகும்பாரே.

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதல்-௨-ம்-இரண்டாவது-௨-ம் மூன்றுவது-௩-மாகத்தோன்றில் அதின் பலன் யாதெனில் கலியாணங்கூடும் உரவுண்டாகும் குடிபோக நன்று அரசர்களால் பலவிதத்தும் பாக்கியமானதுவருகும்நாளுக்குநாள் விருத்தியாகும் உத்தமம். எ-று. (௰௯)

## ௨-௩-௨-வரின் பலன்.

பார்க்கவேரெண்டுநூறும் ரெண்டுவந்துதிக்குமாகில்
தீர்க்கமாம்நன்மைபூணும் தீவினையகன்றுபோகும்

RangaRakes tamilnavarasam.com

கோர்க்குமேவுன்றல்வாழ்வுங் குறைவிலாச் செல்வமுண்டாம்
யேர்க்கவேவேந்தராலும் யாராலும்வினையுமில்லை.

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதல் உ-ம் இரண்டாவது ௩-ம் மூன்றாவது உ-மாகவரின் அதின்பலன் யாதெனில் தீர்க்கமாகிய நன்மையானதுப் பூணும் தீவினையகலும் குன்றாதவாழ்வுண்டாகும் குறைவில்லாதச் செல்வம்பெருகும் வேந்தர்களாலும் மற்றவர்களாலும் வினையில்லையாம் உத்தமம்-எ-

## உ-௪-க-வரின் பலன்.

வினையில்லைரெண்டும்பத்து மொன்றுவந்துதிக்குமாகில்
கனியெனத்தொடுத்ததெல்லாங் களிப்புடன்ஜெயமதாகும்
மணியெனப்பொருளினோடு மாயவனருளுமுண்டாம்
இனியெனவிவாகங்கூடு மேகினோர்மீள்வார்காணே.

(இ-ள்) பாச்சிகையானது வுருட்டும்போது முதல்-உ-ம்-இரண்டாவது ௪-ம் மூன்றாவது க-மாகவரின் அதின் பலன் யாதெனில் தொடுத்தக்காரியங்கள் யாவும் செயமாகும் பொருள்சேரும் மாயவனார் அருள்பெருகும் விவாகமானது கூடும் துலைதூரம் போனவர்கள் சுகமாகவந்து சேர்வார்கள் உத்தமம்-எ-று. (உக)

## உ-௪-௪-வரின் பலன்.

காணவேரெண்டும்பத்தும் பத்துவந்துதிக்குமாகில்
பூணுமேதீமையோடுப் பொல்லாப்பும்பகைவருத்தம்
நாணவேமனையாளாலே நல்கிடும்வினையுமீனம்
தோணவேதுணையானோர்கள் தூரவேபோவாறென்னே.

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதல்-உ-ம்-இரண்டாவது ௪-ம் மூன்றாவது-௪-மாகத்தோன்றில் அதின் பலன் யாதெனில் தீமையுண்டாகும் பொல்லாப்பும் பகையும் வருத்தமும்நேரும் மனையாளினால் வினையும் ஈனமும் உண்டாகும்தனக்குத்துணையானவர்கள் தூரதேசம்போகுவர்மத்திபம். எ-று

## உ-க-உ-வரின் பலன்.

என்னவேரெண்டுமொன்றும் ரெண்டுவந்துதிக்குமாகில்
பன்னவேகெடுதியாகும் பலனதுவொன்றுமில்லை
மன்னவேபாலனுக்கு மாபயம்பிணியுமுண்டாம்
துன்னவேசெல்வமில்லை துயரமும்பெருகும்பாரே.

RangaRakes tamilnavarasam.com

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதல்-உ-ம் இரண்டாவது க-ம் மூன்றாவது உ-மாகத்தோன்றில் அதின் பலன் யாதெனில் கெடுதியானது நேரும் யாதொருபலனுங் கிட்டாது பாலனுக்குப் பயமாகியப் பிணியுண்டாகும் செல்வமானது அழியும்துயரமானதுப்பெருகும் உரவோர் பகையாகுவர்மத்திபம்-எ-று. (உங)

## உ-க-ம-வரின் பலன்.

பாரெனரெண்டுமொன்றும் பத்துவந்துதிக்குமாகில்
நேரெனச்சண்டையுண்டாம் நினைத்தவைபலித்திடாது
சீரெனச்சகாயமோடுச் செல்வமுஞ்சீருமில்லை
பேரெனப்பொருளும்போகும் பெரும்பகை தீங்குண்டாமே.

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதல் உ-ம்-இரண்டாவது-க-ம்-மூன்றாவது ம-மாகத்தோன்றில் அதின் பலன் யாதெனில் சண்டையானது நேரும் நினைத்தக்காரியம் யாவும்பலியாது ஒருவருடைய சகாயமும் செல்வமும் சீருமில்லாதவனாகும் கைப்பொருள் விரையமாகப்போகும் பெரும் பகையும்தீங்கும் உண்டாகும் மத்திபம், (உச)

## உ-க-ரு-வரின் பலன்.

உண்டெனரெண்டுமொன்றும் நூறுவந்துதிக்குமாகில்
விண்டிடநினைத்ததெல்லா மகன்றிடும்நன்மையில்லை
கண்டிடக்கலங்கும்நெஞ்சங் காணவேபாக்கியமில்லை
பண்டுளபந்தோர்தானும் பகையொடும்பொல்லாப்பாகும்.

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதல் உ-ம்-இரண்டாவது-க-ம் மூன்றாவது ரு-மாகத் தோன்றில் அதின்பலன் யாதெனில் நினைத்தக்காரியங் கைகூடாதுஅகன்றுபோகும் நன்மையில்லை நெஞ்சமானது கலங்கும் பாக்கியம் பலிதமிராது பழமையாகிய பந்துக்கள் யாவரும் பொல்லாப்போடும் பகையாகுவர் மத்திபம்-எ-று. (உரு)

## உ-ரு-ரு-வரின் பலன்.

ஆகவேரெண்டுநூறும் நூறுவந்துதிக்குமாகில்
ஏகவேநினைத்ததெல்லா மின்பமும்பொருளுமுண்டாம்
தாகமாம்பிணியுந்தீருந் தழைத்திடுங்குடும்பம்மேலாய்
பாகமாம்பகையும்நீங்கும் பச்சமால்கிருபையாலே.

(இ-ள்) பாச்சிகையானது வுருட்டும்போது முதல்-உ-ம் இரண்டாவது ரு-ம் மூன்றாவது ரு-மாகத் தோன்றில் அதின்ப

RangaRakes tamilnavarasam.com

லன் யாதெனில் மனதில்நினைத்தக்காரியம் சித்தியாகும் இன்பமானதுப்பெருகும்பொருளுண்டாகும் பிணியானதுத்தீரும் தழைத்துக் குடும்பமானது மேலாகும் பகையானது நீங்கும் மாயவன் அருள்பெருகும் உத்தமம். எ-று. (உசு)

## உ-ங-க-வரின் பலன்.

கிருபையாம்ரெண்டும்நூறு மொன்றுவந்துதிக்குமாகில்
திருகவேதன்சொல்மேலாய் தானதுப்பலிதமாகும்
வருமையாம்பிணியுந்தீரு வளம்பெறவுரவுண்டாகும்
பெருகிடும்பொருளும்வாழ்வும் பெட்புகுந் தனமுஞ்சேரும்.

(இ-ள்.) பாச்சிகையானது வுருட்டும்போது முதல்-உ-ம்-இரண்டாவது ங-ம் மூன்றுவது க-மாகவரில் அதின்பலன்யாதெனில் தன்னுடைய சொல்லானது மேன்மையாகிச் சகலமும் பலிதமாகும் வருமையானது தீரும் உறவானது உண்டாகும் பிணியானது அகலும் பொருளும்வாழ்வும் பெருகும் தனஞ்சேரும் உத்தமம். எ-று. (உஎ)

## உ-ங-ய-வரின் பலன்.

சேரவேரெண்டும்நூறும் பத்துவந்துதிக்குமாகில்
கூரவேவெற்றியோடு கேட்டவைபலிதமாகும்
சீரவேதோஷந்தீருஞ் சென்மத்தின்பிணியும்நீங்கும்
மீரவேகன்னியாலே மகிழ்காணிப்பிள்ளையுண்டாம்.

(இ-ள்) பாச்சிகையானது வுருட்டும்போது முதல் உ-ம்-இரண்டாவது ங-ம் மூன்றுவது ய-மாகத்தோன்றில் அதின் பலன்யாதெனில் வெற்றி யுண்டாம் கேட்டவை பலிதமாகும் தோஷமானது தீரும் சென்மத்திற்பிணியானது நீங்கும் கன்னியினாற் காணியும் மைந்தருமுண்டாகும் நாளுக்குநாள் அதிக்விருத்தியாகும் உத்தமம்-எ-று. (உஅ)

## ய-ய-ய-வரின் பலன்.

உண்டிடனப்பத்தும்பத்து பத்துவந்துதிக்குமாகில்
கண்டிடக்கோடியாடை களிப்புறும்நன்மையுண்டாம்
பண்டுடன்பொருளுஞ்சேரும் பரிகிடுஆடுமாடும்
விண்டிடும்பிள்ளையுண்டாம் வேதைசெய் பிணிபேய்போமே.

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதல் துடங்கி மூன்று விசையும் பத்துபத்தாகத்தோன்றில் அதின்பலன்யாதெனில் கோடியாடைகிடைக்கும் களிப்புண்டாகும் நன்மையானதுப் பெருகும் பொருளானதுச்சேரும் ஆடுமாடுப் பெருகும் சந்த

RangaRakes tamilnavarasam.com

தியுண்டாகும் வேதனை செய்யும்படியான நோய்தீரும் பேய் விலகும் உத்தமம்-எ-று. (௨௯)

### ௰-௱-௧-வரின் பலன்.

போமெனப்பத்தும்நூறு மொன்றுவந்துதிக்குமாகில்
நாமெனச்செல்வமுண்டாம் நலம்பெரும் பொருளுங்கூடும்
தாமெனப்பிள்ளையுண்டாந் தழைத்திடும்பெரியோர்நேசம்
ஆமெனயெடுத்தவேலை யருளொடுபலிக்கும்நேரே.

(இ-ள்) பாச்சிகையானது வுருட்டும் போது முதல்-௰-இரண்டாவது-௱-ம் மூன்றாவது ௧-மாகத்தோன்றில்அதின்பலன் யாதெனில் செல்வமுண்டாகும் நன்மையானதுப் பெருகும் பொருள்வந்துக்கூடும் சந்ததியுண்டாகும் பெரியோர்கள் நேசங்கூடும் உத்தேசித்து யெடுத்தவேலை அருளோடுப் பலிதமாகும் உத்தமம்-எ-று. (௩௰)

### ௰-௱-௨-வரின் பலன்.

நேரெனப்பத்தும்நூறும் ரெண்டுவந்துதிக்குமாகில்
தீரெனவெற்றியாகுந் தொல்லையுந்தீர்ந்துப்போகும்
சீரெனப்பொருளுஞ்சேரும் சேரவேயுரவதாகும்
பேரெனநினைத்ததெல்லாம் பலிதமுமாகும்பாரே.

(இ-ள்) பாச்சிகையானது வுருட்டும்போது முதல்-௰-ம் இரண்டாவது ௱-ம் மூன்றாவது ௨-மாகத்தோன்றில் அதின்பலன்யாதெனில் தொடுத்தக் காரியம் வெற்றியாகும் தொல்லையானதுந்தீரும் பொருள்வந்துச் சேரும் உரவு வந்துக்கூடும் நினைத்தபடிக்குக் காரியம் அனுகூலமாகும் ஆகிலும்யிதுகளெல்லாம் நாளுக்குநாள் பலிதமாகும் உத்தமம்-எ-று. (௩௧)

### ௰-௱-௰-வரின் பலன்.

பார்க்கவேபத்தும்நூறும் பத்துவந்துதிக்குமாகில்
தீர்க்கமாம்வழக்குவெல்லும் தோஷமுங்கலகந்தீரும்
யேர்க்கவேயகமுமீறும் யெழிலுடன்போனோர்மீள்வர்
கோர்க்கவேளாண்மைதானுங் குறையிலாச்செழிக்குங்காணே

(இ-ள்.) பாச்சிகையானது வுருட்டும்போது முதல்-௰-இரண்டாவது-௱-ம் மூன்றாவது ௰-மாகவரின் அதின்பலன்யாதெனில் வழக்குவெல்லும் தோஷமும் கலகமுந்தீரும் மனைதழைக்கும் வெளியூர்போனவர் சுகமுடன்வந்து சேருவார்கள் வேளாண்மையானதுக் குறைவில்லாமல் செழித்தோங்கும் உத்தமம்-எ-று. (௩௨)

RangaRakes tamilnavarasam.com

## ௰-௨-௨-வரின் பலன்.

காணவேபத்தும்ரெண்டும் ரெண்டுவந்துதிக்குமாகில்
பூணவேசகாயம்நேரும் புகழுறுந்தெய்வத்தாலும்
வேணவேபொருளுஞ்சேரும் விருத்தியாம்ஆடும்மாடும்
தோணுமோர்வழக்குவெல்லுந் தோஷமுமில்லைத்தானே.

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதல் ௰-ம் இரண்டாவது ௰-ம் மூன்ருவது ௨-மாகத்தோன்றில் அதின் பலன் யாதெனில் ஒருவரால் சகாயம் நேரும் புகழானதும் பெருகும் தெய்வபலனுண்டாகும் பொருள்வந்துச் சேரும் விருத்தியாகும் ஆடுமாடுப்பெருகும் யெடுத்தவழக்கு வெல்லும் தோஷமில்லை உத்தமம்-எ-று. (௩௩)

## ௰-௨-௩-வரின் பலன்.

தானெனப்பத்தும்ரெண்டும் நூறுவந்துதிக்குமாகில்
ஊனெனநோயும்வந்து உடனதுத்தீர்ந்துப்போகும்
தேனெனவரசராலே தக்கதோருதவியாகும்
மானெனமகிழ்ச்சியுண்டாம் மாராட்டமில்லைதானே.

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதல் ௰-ம் இரண்டாவது ௨-ம் மூன்ருவது ௩-மாகத்தோன்றில் அதின் பலன்யாதெனில் பிணியானதுகண்டு உடனே தீரும் அரசர்களால் உதவியானதுவுண்டாகும் அதினுல் மனமகிழ்ச்சியுண்டாகும் யாதொரு மாராட்டமும் வருவதில்லை உத்தமம்-எ-று. (௩௪)

## ௰-௨-௰-வரின் பலன்.

இல்லெனப்பத்தும்ரெண்டும் பத்துவந்துதிக்குமாகில்
புல்லவேபுகழுமுண்டாம் பொருளதுவந்துசேரும்
வெல்லுமேபகையைத்தானும் வீரமும்வெற்றியுண்டாம்
வல்லவேவஞ்சியாளை வாகுடன்கொள்ளநன்றே.

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதல்-௰-ம்- இரண்டாவது ௨-ம் மூன்ருவது ௰-மாகத் தோன்றில் அதின்பலன் யாதெனில் புகழுண்டாகும் பொருளானது வந்து சேரும் பகையைவெல்லும் வீரமும்வெற்றியுமுண்டாகும் குறித்தப்பெண்ணைக்கொள்ள நன்மையாகும் எ-று. (௩௫)

## ௰-௰-௩-வரின் பலன்.

நன்றெனப்பத்தும்நூறும் நூறுவந்துதிக்குமாகில்
வென்றிடும்நன்மையாகும் விரும்பியப்பொருளுஞ்சேரும்

RangaRakes tamilnavarasam.com

கன்றுடன்காலியோடுக் கன்னியைக்கொள்ளநன்றும்
மன்றுளேமாளிகோல மானலமாகுஞ்சீரே.

(இ-ள்.) பாச்சிகையானது வுருட்டும்போது முதல் -ய-ம்-- இரண்டாவது ரா-ம் மூன்றாவது நூறுமாகத் தோன்றில்அதின்பலன் யாதெனில் வெற்றியுண்டாகும் நினைத்தப் பொருள் கிடைக்கும் கன்றுகாலிச்சேரும் கன்னியரைக் கொள்ள நன்மையாகும் மனையானதுக்கோல மிகவும் நன்மையாகும்இவைகளெல்லாம் நாளுக்குநாள்விருத்தியாகிவரும் உத்தமம்-எ-று,

## ய-க-க-வரின் பலன்.

சீரெனப்பத்தும்வொன்று மொன்றுவந்துதிக்குமாகில்
கூரெனநினைத்ததெல்லாங் கொடுமையாயழிவுண்டாகும்
பாரெனப்பலநோயுண்டு பழியுடன்பகையுமாகும்
பேரெனயின்னிலத்தில் பேசியதெல்லாந்தீதாம்.

(இ - ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல்-ய-இரண்டாவது-க-ம் மூன்றாவது-க-மாகத்தோன்றில் அதின் பலன் யாதெனில் நினைத்தக்காரியம் யாவும் கொடுமையாக அழிவுண்டாகும்பலவிதமானப் பிணியணுகும் பழியோடும்பகைநேரும் இப்பூமியின்மீது தான்பேசிடும் வார்த்தையாவும் தீதாக விருக்கும் யாரும்மதிக்கார்கள் மத்திபம்-எ-று. (௬எ)

## ய-க-உ-வரின் பலன்.

தீதிலாப்பத்தும்வொன்றும் ரெண்டுவந்துதிக்குமாகில்
போதவேகேட்டதெல்லாம் புகழுடன்பலிதமாகும்
வாதைசெய்பிணியுந்தீரும் வளம்பெறவுரவுகூடும்
யேதவேநினைத்தவேலை யெழிலுடன்வந்துக்கூடும்.

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல்-ய-ம்-இரண்டாவது-க-ம் மூன்றாவது உ-மாகத்தோன்றில் அதின்பலன் யாதெனில் கேட்டபொருள் பலிதமாகிவருகும் பாதையாகநேர்ந்திருக்கும் பிணியானதுந்தீரும் உறவானதுகூடும் உத்தேசித்திருக்கும்காரியம் உடனே கைகூடிவரும் உத்தமம்-எ-று.(௬அ)

## ய-க-ய-வரின் பலன்.

கூடவேபத்தும்வொன்றும் பத்துவந்துதிக்குமாகில்
நாடியப்பரமனாலே நன்னியதெல்லாம்நன்மை
தேடியேயுரவுகூடும்திகழுருஞ்செல்வந்தானும்
நீடியமனிதனாலே நிலைபடவுதவியாகும்.

RangaRakes tamilnavarasam.com

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல்-௰-ம் இரண்டாவது-௧-ம்-மூன்றாவது ௰-மாகத்தோன்றில் அதின்பலன் யாதெனில் பரமேஸ்வரனுடைய கிருபையினால் எண்ணியகாரியம்யாவும் நன்மையாகும் தேடிவந்து உறவானதுகூடும் செல்வமுண்டாகும் ஒருமனிதனால் உதவியானது உண்டாகும் உத்தமம்-எ-று. (௩௯)

## ௰-௰-௱-வரின் பலன்.

ஆகவேபத்தும்பத்தும் நூறுவந்துதிக்குமாகில்
தாகமாய்நினைத்ததெல்லாந் தடையிலாவந்துகூடும்
பாகமாம்வழக்கும்வெல்லும் பலபொருள்சித்தியாகும்
தோகமாம்பிணியுந்தீரும் துலையுமேதோஷந்தானும்

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல்-௰-ம்-இரண்டாவது ௰-ம் மூன்றாவது ௱-மாகத்தோன்றில்அதின்பலன்யாதெனில் நினைத்தகாரியம் தடையில்லாமல் சித்தியாகும் வழக்கானதுவெல்லும் பலவிதமானபொருள் பலிதமாகும் நெடுநாளாகயிருந்த பிணியானது தீரும் தோஷமாக ஒருவன்செய்தயேவல்தோஷமானது விலகும் நாளுக்குநாள் சுகப்படும் உத்தமம்-எ-று. (௪௰)

## ௰-௧-௱-வரின் பலன்.

தானெனபத்தும்வொன்றும் நூறுவந்துதிக்குமாகில்
கோனெனத்தெய்வத்தாலே கூடிடும்நினைத்தவேலை
நானெனும்வழக்குவெல்லும் நன்னியேயுரவுசேரும்
கானெனக்கலியாணங்கூடுங் கன்னியும்பெருவாள்பிள்ளை

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல்-௰-ம் இரண்டாவது ௧-ம் மூன்றாவது ௱-மாகத்தோன்றில் அதின்பலன் யாதெனில் தெய்வசகாயத்தினால் நினைத்தவேலை கைகூடிவரும் வழக்கானது வெல்லும் உரவுகூடும் கலியாணமாகும் மனையாளும் புத்திரனைப் பெறுகுவாள்-எ-று. (௪௧)

## ௰-௰-௧-வரின் பலன்.

வாளெனப்பத்தும்பத்தும் வொன்றுவந்துதிக்குமாகில்
கோளெனத்தீமைகேடும் குற்றமாம்பிணியுமுண்டாம்

RangaRakes tamilnavarasam.com

ஆளெனவரசராலே யாகிடும்பயமுந்துன்பம்
நாளெனவொருவராலே நன்னும்வியாக்கூலமென்னே.

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல் ௰-ம்-இரண்டா வது ௰-ம் மூன்ருவது-க-மாகவரின் அதின்பலன் யாதெனில் கோளும் தீமையும் கேடும் பிணியுமுண்டாகும் அரசர்களால் பயமும் துன்பமும் அணுகும் ஒரு சினேகிதனால் வியாக்கூல மானதுண்டாகும் மத்திமம்-எ-று. (சஉ)

## ௰-உ-க-வரின் பலன்.

என்னவேபத்தும்ரெண்டும் வொன்றுவந்துதிக்குமாகில்
மின்னியவெற்றியோடு விவாகமும்விரவில்கூடும்
உன்னியதெய்வத்தாலே முற்றிடுஞ்சகலலாபம்
பொன்னுடன்பூமியுண்டாம் புத்திரவிருத்தியாகும்.

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல் ௰-ம் இரண்டா வது உ-ம் மூன்ருவது க-மாகத்தோன்றில் அதின்பலன் யா தெனில் வெற்றியுண்டாகும் விவாகமாகும் தெய்வசகாயத்தி னல் சகலவிதத்தும் லாபமானதுபெருகும் அத்துடன்பொன் னும் பூமியுமுண்டாகும் புத்திரசம்பத்தோடு வாழ்வார்கள் உத்தமம்-எ-று. (சங)

## ௰-௰-உ-வரின் பலன்.

ஆகவேபத்தும்பத்தும் ரெண்டுவந்துதிக்குமாகில்
சோகமாம்பிணியும்போகும் சொல்லதுக்கீர்த்தியாகும்
தாகமாம்பயமுமில்லை தழைத்திடுங்குடும்பம்மேலாய்
யேகமாம்விளைவுமுண்டுயெடுத்தவைபலிக்கும்பாரே.

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல் ௰-ம் இரண்டா வது ௰-ம் மூன்ருவது உ-மாகத்தோன்றில் அதின்பலன் யா தெனில் பிணியானதுதீரும் தன்னுடையவார்த்தை மேன்மை யாகும் பயம்விலகும் குடும்பமானது தழைத்துவோங்கும்அதி கமா வேளாண்மைவிளையும் யெடுத்தகாரியம்யாவும் தடையில் லாமல் பலிதமாகும் உத்தமம் எ-று. (சச)

RangaRakes tamilnavarasam.com

### ௩-௩-௩-வரின் பலன்.

பார்க்கவே நூறும் நூறும் நூறுவந்துதிக்குமாகில்
தீர்க்கமாம்நன்மையாகுந்திரவியம்வந்துசேரும்
மூர்க்கமாம்வழக்குவெல்லு மிக்கதோர்பயமுந்தீரும்
ஏர்க்கவேநினைத்ததெல்லா மிஷ்டத்தின்படியேகாணும்.

இ-ள். பாச்சிகையுருட்டும்போது முதல்துடங்கி மூன்று விசையும் நூறு நூறாகத்தோன்றில் அதின்பலன் யாதெனில் நன்மையுண்டாகும் திரவியமானது வந்துசேரும் மூர்க்கமாகத்துடர்ந்த வழக்கானது வெல்லும் பயந்தீரும் மனதில் நினைத்தவை இஷ்டம்போல்காணும் உத்தமம்-எ-று. (சு௫)

### ௩-௩-க-வரின் பலன்.

காணவே நூறும் நூறும் வொன்றுவந்துதிக்குமாகில்
நாணவேபோனசொத்து நலமுடன்வந்துசேரும்
தோணவேசனியால்பட்டத் தொல்லையும்விலகிப்போகும்
பூணவேதெய்வத்திற்குப் பூசைநீயொன்றுபோடே.

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல் ௩-ம் இரண்டாவது ௩-ம் மூன்றுவது க-மாகத்தோன்றில் அதின் பலன் யாதெனில் கைவிட்டுப்போன சொத்துவந்துசேரும் சனியானதுப்பிடித்துப்பட்ட கஷ்டமானது விலகும் ஆகையால் உங்கள் குலதெய்வத்திற்குப் பூசையொன்றுபோட சகலகாரியமும் சித்தியாகும் உத்தமம்-எ-று. (46)

### ௩-௩-உ-வரின் பலன்.

போடவே நூறும் நூறும் ரெண்டுவந்துதிக்குமாகில்
கூடுமோர்மனிதனாலே குணமதுவுனக்குண்டாகும்
தேடுவாய்க்காணிபூமி திருவுளச்செயலுமுண்டாம்
நாடிடும்நாலுபேற்கு நல்லுபகாரஞ்செய்வாய்.

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல் ௩-ம் இரண்டாவது ௩-ம் மூன்றுவது உ-மாகத்தோன்றில் அதின்பலன் யாதெனில் இப்போது நீ குறித்திருக்கும்படியான மனிதனால்நன்மையான உபகாரம் நடக்கும் அதினால் நீ காணிபூமிக்கொள்

RangaRakes tamilnavarasam.com

வாய் திருவுளத்தின் செயலுண்டாகும் நாலுபேற்கும் உபகா ரஞ்செய்தும் வாழ்குவாய் உத்தமம்-எ-று. (௪௭)

### ௫-௫-௬-வரின் பலன்.

செய்யவேறூறும்நாறும் பத்துவந்துதிக்குமாகில்
ஐயமுமொன்றுமில்லை அடுத்திடுமுறவும்பூமி
துய்யபெண்கொள்ளநன்றுதூரமும்போனோர்மீள்வர்
தெய்வமுஞ்சகாயமுண்டு செயமிதுஉத்தமந்தான்.

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல் ௫-ம் இரண்டாவது ௫-ம் மூன்றாவது ௬-மாகத்தோன்றில் அதன்பலன் யாதெனில் கேட்டகாரியத்தில் யாதொரு ஐயமுமில்லை உறவானதுக்கூடும் பூமியானதுக்கொள்ள நன்மையாகும் பெண்கொள்ளவும்நன்று தூரப்போனவர்கள் வந்துசேருவார் தெய்வசகாயமுண்டாகும் நினைத்தகாரியஞ் செயமாகும்-எ-று. (௪௮)

### ௫-௧-௧-வரின் பலன்.

உற்றிடநூறும்வொன்றும் வொன்றுவந்துதிக்குமாகில்
குற்றமாம்நினைத்தவைகள் கூடியேவரமாட்டாது
பற்றியதெல்லாஞ்சேதம் பழியொடுக்கலகம்நேரும்
சுற்றமும்பாழதாகும் சுகமதுயில்லைக்கூரே.

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல் ௫-ம் இரண்டாவது ௧-ம் மூன்றாவது ௧-மாகத்தோன்றில் அதின்பலன் யாதெனில் இப்போது நீ நினைத்தக்காரியம் யாவுங்கூடிவரமாட்டாது சகலமுஞ் சேதமாகும் அத்துடன் பழியுங்கலகமும் நேரும் சுற்றத்தினிலும் சேதமாகும் சுகமானது யிராதுயிது மத்திபம்-எ-று. (௪௯)

### ௫-௧-௨-வரின் பலன்.

கூறவேநூறும்வொன்றும் ரெண்டுவந்துதிக்குமாகில்
சீறதாம்பெண்ணேகொள்ள சம்பத்துத்தானுண்டாகும்
நேறவேயாடும்மாடும் நீடிடவந்துசேரும்
தேறவேமனதின்போலே தான்ஜெயமாகும்நன்மை.

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதல்-௫-ம் இரண்டாவது ௧-ம் மூன்றாவது ௨-மாகத்தோன்றில் அதின் பலன் யா

RangaRakes tamilnavarasam.com

தெனில் நீயிப்போதுக் குறித்தப்பெண்ணைக்கொள்ளச் சம்பத்துண்டாகும் ஆடுமாடு அதிகவிருத்தியாக வந்துசேரும்அதுவுமன்றி உன்னுடையமனம்போல் ஜெயமாகும்-எ-று. (௫௰)

## ௱-௧-௰-வரின் பலன்.

நன்மையாம்நூறும்வொன்றும் பத்துவந்துதிக்குமாகில்
பன்மையாய்நினைத்ததெல்லாம் பலித்திடுந்தடையிலாமல்
தன்மையாய்வியாபாரத்தில் தவழ்ந்திடுமதிகலாபம்
இன்மையாய்மனதின்போலே யிற்றிடசெயமதாகும்.

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதல்-௱-ம் இரண்டாவது-௧-ம் மூன்றாவது ௰-மாகத் தோன்றில் அதின் பலன்யாதெனில் நீ நினைத்தக்காரியம் பலிதமாகுந் தடையில்லை வியாபாரஞ்செய்ய அதிகலாபங் கிடைக்கும் ஒருவர் சொல்லையுங் கேளாமல் மனம்போல்நடத்திவர செயமாகும்உத்தமம்-எ-()

## ௱-௱-௧-வரின் பலன்.

ஜெயமென நூறும்வொன்றும் நூறுவந்துதிக்குமாகில்
நயம்பெறும்மணையேகோல நன்மையாஞ்செல்வமுண்டாம்
வயம்பெறவுள்ளுக்குள்ளே வஞ்சகனொருவனுண்டு
பயம்பெருமவன்தன்னாலே பலிப்பதுமத்திபந்தான்.

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல் ௱-ம் இரண்டாவது ௱-ம் மூன்றாவது ௧-மாகத்தோன்றில் அதின் பலன் யாதெனில் நீகேட்டகாரியஞ் செயமாகும் மணைக்கோலசெல்வமுண்டாகும் அதிலொருதடையுண்டு அதாவது உள்ளுக்குள்ளே வொருவனிருந்துக்கொண்டு வஞ்சனையாகத் தடைசெய்துவருகுரான் அவனால் தடைப்படும் ஆதலால் இது மத்திபம்-எ-று. (௫௰௨)

## ௱-௨-௧-வரின் பலன்.

தானென நூறும்ரெண்டும் வொன்றுவந்துதிக்குமாகில்
நானெனவுன்மேல்விரோதம் நாட்டினோர்நாசமாவார்
தேனெனவொருவனாலே காரியஞ்செயங்களாகும்
கோனெனபுவியின்மீது குலவிடவாழ்வுண்டாமே.

RangaRakes tamilnavarasam.com

(இ-ள்) பாச்சிகையுருட்டும்போது முதல் ௬-ம் இரண்டாவது உ-ம் மூன்றாவது க-மாகத்தோன்றில் அதின் பலன் யாதெனில் உன்மீது நெடுநாளாக விரோதமாக யிருந்தவர் நாசமாகுவர் இப்போது ஒருமனிதனால் உன்காரியம் சித்தியாகும் அதின்மேல் உனக்கு சகலமும் நன்மையாகிவாழ்குவாய் உத்தமம்-எ-று. (௫௩)

உண்டெனநூறும்ரெண்டும் ரெண்டுவந்துதிக்குமாகில்
பண்டெனச்செல்வமோங்கும் பால்பசுக்கொள்ளநன்றும்
விண்டிடவேளாண்மைசெய்ய விருத்தியுமிகவேயாகும்
கண்டதோரொருமாதத்தில் காரியமாகுஞ்சித்தி.

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல் ௬-ம் இரண்டாவது உ-ம் மூன்றாவது உ-மாகத்தோன்றில் அதின்பலன் யாதெனில் செல்வமானதுவோங்கும் பால்பசுக்கொள்ள நன்மையாகும் வேளாண்மைசெய்ய விருத்தியாகும் இவை ஒருமாதத்தில் சித்தியாகும்-எ-று. (௫௪)

## ௬-உ-௰-வரின் பலன்.

சித்தியாம்நூறும்ரெண்டும் பத்துவந்துதிக்குமாகில்
சுத்தமாம்நினைத்தவைபோல் சூழவேவந்துகிட்டும்
நத்தியமனிதனாலே நல்லுபகாரமாகும்
பத்தியாய்குலதெய்வத்தை பாங்குடன்துதிக்கநன்றே.

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல் ௬-ம் இரண்டாவது உ-ம் மூன்றாவது ௰-மாகத்தோன்றில் அதின்பலன் யாதெனில் நினைத்தக்காரியங் கைகூடும்நீநாடியிருக்கும்படியான மனிதனால் நன்மையான உபகாரம் நடக்கும் நீ உன்குலதெய்வத்தை மறவாமல் நாளும் துதித்துவர நன்மையாகும் உத்தமம்-எ-று. (௫௫)

## ௬-உ-௬-வரின் பலன்.

துதிக்கவேநூறும்ரெண்டும் நூறுவந்துதிக்குமாகில்
விதிக்கவேவிளங்கக்கேட்ட வேண்டுங்காரியங்களாகும்
மதிக்கவேயுத்தியோகமகிழுடன்தானுண்டாகும்
கதிக்கவேபாக்கியங்கள் களிப்புடன்வருகும்விள்ளே.

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல் ௱-ம் இரண்டாவது ௨-ம் மூன்றாவது ௱-மாகத்தோன்றில் அதின்பலன் யாதெனில் நீ வினவிக்கேட்டக் காரியங்கைகூடும் உத்தியோகங் கிடைக்கும் பாக்கியமுண்டாகும் மனங்களிக்கும்உத்தமம்-எ-

### ௱-௰-௧-வரின் பலன்.

விள்ளவே நூறும்பத்தும் வொன்றுவந்துதிக்குமாகில்
கொள்ளவேகேட்டகாரியங் குணப்படும்நன்மையாகும்
பிள்ளையும்பிறக்கும்பாறு பெண்ணதுக்கொள்ளநன்றும்
தெள்ளியப்பணமுங்கேழ்க்கத் தேடியேவருகும்பாரே.

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல் ௱-ம் இரண்டாவது ௰-ம் மூன்றாவது ௧-மாகத்தோன்றில் அதின்பலன் யாதெனில் நீ கொள்ளவுங் கொடுக்கவுங் கேட்டக்காரியம் நன்மையாகும் பிள்ளைபிரக்கும் பெண்கொள்ளநன்று பணங்கேட்டவிடத்தில் தடையில்லாமல் கொடுப்பார்கள் நாளுக்கு நாள் நன்மையாகும் எ-று. (௫௭)

### ௱-௰-௨-வரின் பலன்.

பார்க்கவே நூறும்பத்தும் ரெண்டுவந்துதிக்குமாகில்
தீர்க்கமாய்போனசொத்துத் திரும்பியேவந்துசேரும்
பூர்க்கவேபிடவைபொன்னும் பொருளுடன்போனதுண்டு
யேர்க்கவேயின்னமெட்டு நாளையில்காண்டாய்நேரே.

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல் ௱-ம் இரண்டாதை ௰-ம் மூன்றுவது ௨-மாகத்தோன்றில் அதின்பலன் யாதெனில் கைவிட்டுப்போனசொத்து திரும்பிவந்துச்சேரும் அத்துடன் பொன்னும் பிடவையும் போனதுண்டு அதுவும் யின்னம் எட்டுநாளில் வந்துசேரும் உத்தமம்-எ-று. (௫௮)

### ௱-௰-௰-வரின் பலன்.

நேரென நூறும்பத்தும் பத்துவந்துதிக்குமாகில்
சீரெனஆடுமாடுஞ் செய்ப்பயிர்விருத்தியாகும்

RangaRakes tamilnavarasam.com

பேரேனவிவாகஞ்செய்ய பெருகிடுஞ்செல்வந்தானும்
கூறெனநினைத்தவேலை கூடிடும்செயங்களாமே.

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல் ௱-ம் இரண்டாவது ௰-ம் மூன்றாவது ௰-மாகத்தோன்றில் அதின்பலன் யாதெனில் ஆடுமாடுக்கொள்ளவும் பயிர்ச்செய்யவும் விருத்தியாகும் விவாகம்நடக்கும் செல்வமோங்கும் நினைத்தவேலையாவுங் கூடியசீக்கிரத்தில் பலிதமாகும் உத்தமம்-எ-று. (௫௯)

### ௱-௰-௱-வரின் பலன்.

ஆமெனநூறும்பத்தும் நூறுவந்துதிக்குமாகில்
நாமெனவொருவனாலே நண்ணுங்காரியங்களாகும்
தாமெனவிவாகங்கூடும் தழைத்திடவரவுமாகும்
காமெனமாயவன்தன் கடாட்சமும்பெருகும்பாரே.

(இ-ள்.) பாச்சிகையுருட்டும்போது முதல் ௱-ம்இரண்டாவது ௰-ம் மூன்றாவது ௱-மாகத்தோன்றில்அதன்பலன்யாதெனில் ஒருமனிதனால் நினைத்தக்காரியங்கள் யாவும் கைகூடும் விவாகம்நடக்கும் உறவுசேரும் மாயவன்கடாட்சமுண்டாம் உத்தமம்-எ-று. (௬௰)

## பாச்சிகைசாஸ்திரம்

### மூலமும் - உரையும்

முற்றிற்று.

கடவுள் துணை.

# தேவதாசக்கரத் தொடுகுறி.

| | | | |
|---|---|---|---|
| (க) அகஸ்தியன் | (உ) சிவாலயம் | (ங) குயவன் | (ச) அனுமான் |
| (ரு) பெருமாள் | (சு) அரசன் | (எ) இந்திரன் | (அ) வேதாளம் |
| (கூ) துர்க்கை | (ய) செக்கான் | (யக) அருந்துதி | (யஉ) சூரியன் |
| (யங) பூரணகும்பம் | (யச) வீரசூரன் | (யரு) கற்பகவிருக்ஷம் | (யசு) நட்சத்திரம் |
| (யஎ) கண்ணாடி | (யஅ) சோதி | (யசு) நிருதி | (உய) அகஸ்தியன் |

மேற்கண்ட சக்கரத்தி லொன்றைத்தொடச்சொல்லி தொட்டதேவதைக் குறிய லெக்கம்போல் பாட்டையெடுத்து வாசித்துப்பார்க்க நினைத்தகாரியம் ஆம் ஆகாதென அறிந்துக் கொள்ளலாம்.

க - அகத்தியன்.

பொன்பொருள்வந்துசேரும் போதவேகருமம்நன்றும்
தன்கிளைக்கூட்டமுண்டாம் தருமமேதழைத்துடாழும்
வன்பகையில்லைத்தானே வாழ்வதுமெத்தவுண்டாம்
அன்புகள்மெத்தவுண்டு அகத்தியனைதொட்டதாலே.

### ௨ - சிவாலயம்.

தலமதுகருமம்நன்றாய் தாழ்வதுக்கேடுமில்லை
உலகினில்பொன்னுஞ்சேரு முத்தரோர்மெத்தநன்மை
நலம்துக்கருமந்தானே நாள்தோறும்வெற்றியாகும்
சிலபொருள்வந்துகூடும் சிவாலயந்தொட்டதாலே.

### ௩ - குயவன்.

விறைந்ததுவினையுமில்லை வேண்டியசெயமுமில்லை
உறைந்ததோர்ப்பிள்ளையில்லை ஓங்கியநன்மைதீதாம்
திறத்திலேநிற்கவேண்டாந் தீங்குமேல்தீங்கதாகும்
குறைத்தலைப்பேய்வந்தெய்துங் குயவனைத்தொட்டதாலே.

### ௪ - அனுமான்.

தேரணிப்பயமுமில்லை திருவுடன்செல்வமுண்டாம்
ஓரணிப்பாக்கியமோடு வோங்கிடுங்கீர்த்தியுண்டாம்
தாரணிக்கருமம்நன்றாம் தயவுகள்நன்றதாகும்
ஆரணிக்குறிப்புமுண்டு அனுமானைத்தொட்டதாலே

### ௫ - பெருமாள்.

வருவதோர்கருமம்நன்றாம் வாழ்வதுவெற்றியுண்டாம்
பருவமாய்ப்பயமுமில்லை பண்புடன்வெற்றியாகும்
இருபத்தியோர்நாள்தன்னில் யெண்ணியக்கருமம்நன்றாம்
திருமணிமாலைமார்பன் திருமாலைத்தொட்டதாலே.

### ௬ - அரசன்.

பெருகியக்கருமமாகும் பேணியநன்மையில்லை
இருதயம்தீமையாகும் யிருநெரியின்பமில்லை
கருதியப்பொருளுஞ்சேருங் காரியம்பலிப்புமில்லை
அருகியவரசன்றன்னை அடவுடன்தொட்டதாலே.

### ௭ - இந்திரன்.

முந்தினவினையுமில்லை மூண்டதோர்ப்பகையுமில்லை
வந்திடும்நன்மைதானே வாழ்வதுமிகவுண்டாகும்
சந்ததந்தன்னிதாகும் சாலவேநன்மையாகும்
இந்திரன்தன்னைத்தானு மிஷ்டமாய்த்தொட்டதாலே.

RangaRakes tamilnavarasam.com

௮ - வேதாளம்.

மாதாவும்பிதாவும்நோயாம் மன்னவர்பகையுமுண்டாம் [ம்
சேதங்கள்மெத்தவுண்டாஞ் சேர்த்திட்டப்பொருளும்போகு
ஆதாரமானநேசம் அகன்றிடும்விரோதமுண்டாம்
வேதாளந்தன்னைத்தொட்ட வினையினால் விளையுந்தானே.

௯ - துர்க்கை.

ஓங்கியப்பொருளுமுண்டாம் உயர்ந்தநோர்செல்வமுண்டாம்
தேங்கியக்கருமம்நன்றும் சேரிடம்செல்வமுண்டாம்
பாங்கதாய்ப்பதியுமுண்டாம் பயமில்லைநன்மையாகும்
தாங்கியதுர்க்கைதன்னை தன்மையாய்தொட்டதாலே.

௰ - செக்கான்.

ஆனதோரழிவுண்டாகும் ஆளைப்பிரிவுமுண்டாம்
போனவர்மீளமாட்டார் பூமியும்வேறதாகும
மானிடர்வரவுமில்லை வையகந்தூரப்போமே
சினியுங்கசப்பதாகுஞ் செக்கானைத்தொட்டதாலே.

௰௧ - அருந்துதி.

போனதோர்க்கருமம்நன்றும் போவிடம்நன்மையாகும்
வானமும் மழையுமுண்டாம் வான்பொருள்வந்துசேரும்
யீனமுமிரக்கமாகும் யியலுடன்வாழ்வார்பிள்ளை
ஆனதோர்ப்பிணியும்போகும் அருந்துதிதனைத்தொட்டாலே.

௰௨ - சூரியன்.

மாறியும்மழையுமுண்டு மக்களும்பொருளுமுண்டு
வீறியமானபோறில் வெற்றியுமிகவுண்டாகும்
காரியஞ்செயமதாகுங் கனப்பொருள்வந்துசேரும்
சோறமும்வெளியதாகும் சூரியனைத்தொட்டதாலே

௰௩ - பூரணகும்பம்.

காரணந்தினமுண்டாகுங் கருதியப்பொருளுமுண்டாம்
தாரணித்தன்னதாகும் தன்கிளைக்கூடவாழ்வார்
சீரணியாகவேதான் சேயதுத்தான்பிரக்கும்
பூரணகும்பந்தன்னைப் புகழுடன்தொட்டதாலே.

௰௪ - வீரசூரன்.

ஓங்கியக்கருமம்நன்றும் வொற்றுதல்வந்துசேர்வாள்
தீங்கதுவொன்றுமில்லை சேர்ந்திடம்நன்மையாகும்
பாங்குடன்செல்வமுண்டாம் பாலுடன்சோறுமுண்டாம்
வீங்கியப்பிணியுந்தீரும் வீரசூரனைத்தொட்டதாலே.

RangaRakes
tamilnavarasam.com

### ௰௫ - கற்பகவிருட்சம்.

விற்பொருள்வாழுமேசேரும் வேண்டியகருமநன்றும்
கைப்பொருள்வந்துசேரும்கண்டவர்மதிக்கவாழ்வார்
இப்பதித்தனக்குநன்மை யின்பமுங்குணமுமுண்டாம்
கற்பகவிருக்ஷந்தன்னைக் களிப்புடன்தொட்டதாலே.

### ௰௬-நட்சத்திரம்.

மிக்கவேகருமம்நன்றும் வேண்டியப்பொருளுமுண்டாம்
தக்கதோர்மழையுமுண்டு தாரணிக்கலமில்லை
திக்கெல்லாம்நன்மையாகும் சேர்ந்தவர்வுளவதாகும்
பக்கநட்சேத்திரந்தன்னைப் பாங்குடன்தொட்டதாலே.

### ௧௭ - கண்ணடி.

விண்ணுளும்மன்னராலும் வேந்தரால்வினையுமில்லை
பண்ணுகவினையுமுண்டாம் பழுதில்லாநன்மையுண்டாம்
குண்ணுதவாழ்வுமுண்டாம் குறையில்லாச்செல்வமுண்டாம்
கண்ணடித்தன்னைத்தானுங் களிப்புடன்தொட்டதாலே.

### ௧௮ - சோதி.

பொருளுடன்செல்வமுண்டாம் செம்பொனும்வெள்ளியுமு
கருதியவுரவுங்கூடும் காரியம்பலனுமுண்டாம் [ண்டாம்
மருவியயின்பமுண்டாம் மக்களுஞ்சுற்றமுண்டாம்
அறிவுடன்சோதிதன்னை அன்புடன்தொட்டதாலே.

### ௧௯ - நிருதி.

கருதியவினையும்போகும் காரியமிகவுண்டாகும்
உருதியாய்ப்பொருளுங்கூடு மோங்கியக்கருமம்நன்றும்
சுருதியாய்க்கேட்டதெல்லாஞ் சுகம்பெறவந்துகூடும்
நிருதியைத்தொட்டதாலே நிட்சயம்வாழ்வுதானே.

### ௨௰ - அகத்தியன்.

பகைத்தவருரவுமாகும் பண்ணியப்பயருமுண்டாம்
வகைத்ததுவெற்றியாகும் வலியவேபொருளுங்கூடும்
செகத்திலேயொருவர்க்காக சித்தித்தக்கருமம்நன்றும்
அகத்தியன்தன்னைத்தானும் அன்பொடுதொட்டதாலே.

தேவதாசக்கரத் தொடுகுறி
முற்றிற்று.